இத்திட்டத்தின் மூலம் மாணவிகள் தொலைதூரக் கல்லூரிகளுக்குச் செல்லவும், மகளிர் மற்றும் திருநர்கள் பணியிடங்களுக்குச் செல்லவும், மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்காகப் பயணம் செய்யவும் கட்டணமில்லாப் பேருந்து வசதி கிடைத்துள்ளது.

பயனாளிகள் மகிழ்ச்சி

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த திருப்பத்தூர் மாவட்டம், வெலகல்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த மங்கை குமார் கூறியதாவது:

ஓசூரில் உள்ள உறவினர் வீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக திருப்பத்தூரில் இருந்து கிருஷ்ணகிரி வழியாகப் பேருந்தில் பயணம் செய்தேன். டீலக்ஸ் பேருந்தில் வெற்றிப் பயணத் திட்டத்தின் கீழ் கட்டணமில்லாப் பயணச்சீட்டு வழங்கப்பட்டது. இதனால் ரூ.160 சேமிக்கப்பட்டது. பெண்கள் கட்டணமின்றிப் பயணம் செய்யும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி என்றார்.

ஓசூரில் வசிக்கும் திவ்யா நாகராஜ் கூறியதாவது:

பர்கூர் வட்டம், கந்திகுப்பத்தில் உள்ள காலபைரவர் கோயிலுக்கு மாதந்தோறும் சென்று வருகிறேன். இந்த மாதமும் டீலக்ஸ் பேருந்தில் கோயிலுக்குச் சென்றபோது, வெற்றிப் பயணத் திட்டத்தின் கீழ் கட்டணமில்லாப் பயணச்சீட்டு வழங்கப்பட்டது. இதனால் ரூ.120 சேமிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் வேலைக்குச் செல்லும் பெண்கள், கல்லூரி மாணவிகள், திருநர்கள் உள்ளிட்டோர் பெரிதும் பயனடைவார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்திய முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



கோவை கலெக்டர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனைக்கூட்டத்தில் கலெக்டரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான பவன்குமார் கிரியப்பனவர் வரைவு வாக்குச்சாவடி பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுக்கு வழங்கினார். அருகில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் மகேஸ்வரி, உதவி ஆட்சியர் (பயிற்சி) துசார் சிங் ஆகியோர் உள்ளனர்.

கரூர் சகி சேவை மையத்தில் காலி பணியிடம்: விண்ணப்பங்கள்வரவேற்பு

கரூர், அக். 23–

கரூர் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (OSC181) இரண்டு வழக்குப் பணியாளர்கள், ஒரு தகவல் தொழில்நுட்பப் பணியாளர் என மொத்தம் 3 பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. இதற்கு தகுதியுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், 40 வயதுக்கு உள்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். அரசு அல்லது அரசு சாரா தொண்டு நிறுவனங்களில் மூன்றாண்டுகள் பணியனுபவம் பெற்றிருக்க வேண்டும். பணியிடங்கள் சுழற்சி முறையில் 8 மணி நேரப் பணியாக (3X8) இருக்கும்.

வழக்குப் பணியாளர்கள்: இரண்டு பணியிடங்களுக்கு சமூகப்பணி, உளவியல், வளர்ச்சிப் பணிகள் அல்லது சமூகவியல் ஆகிய துறைகளில் முதுநிலை அல்லது இளநிலைப் பட்டம் பெற்ற பெண்கள் விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு மாதம் ரூ.18,800 தொகுப்பூதியம் வழங்கப்படும்.

தகவல் தொழில்நுட்பப் பணியாளர்: ஒரு பணியிடத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது கணினிப் பொறியியலில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தட்டச்சில் முதுநிலைத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்பணிக்கு மாதம் ரூ.20,000 தொகுப்பூதியம் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தை https://karur.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, சுயவிவரக் குறிப்புடன் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் அக்டோபர் 26 முதல் நவம்பர் 9ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கரூர் மாவட்டம் – 639 007. இந்தத் தகவலை கலெக்டர் சி.முத்துக்குமரன் தெரிவித்துள்ளார்.

AN INVESTOR EDUCATION AND AWARENESS INITIATIVE

Do join us to learn more about Mutual Funds.

Date and Venue:

Sunday, 25th October 2026; 1:00 p.m. Onwards.
at Radisson Blu Hotel, 164/165, Avinashi Road,
Coimbatore - 641 004, Tamil Nadu.
For registration, please contact: Gopi Thangavelu, Mobile: 94426 42655.
Registration is compulsory. The registration time will be from 9:30 a.m. to 5:30 p.m.
No walk-ins will be allowed.

HDFC MUTUAL FUND BHAROSA APNO KA

An Investor Education and Awareness Initiative

Visit https://www.hdfcfund.com/information/key-know-how to know more about the process to complete a one-time Know Your Customer (KYC) requirement to invest in Mutual Funds. Investors should only deal with registered Mutual Funds, details of which can be verified on the SEBI website (www.sebi.gov.in/intermediaries.html). For any queries, complaints & grievance redressal, investors may reach out to the AMCs and / or Investor Relations Officers. Additionally, investors may also lodge complaints directly with the AMCs. If they are not satisfied with the resolutions given by AMCs, they may raise complaint through the SCORES portal on https://scores.sebi.gov.in. SCORES portal facilitates investors to lodge complaint online with SEBI and subsequently view its status. In case the investor is not satisfied with the resolution of the complaints raised directly with the AMCs or through the SCORES portal, they may file any complaint on the Smart ODR on https://smartodr.in/login.

Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.

சிவா மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 249–ஏ, பை–பாஸ் ரோடு,
மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர் – 641 043, தமிழ்நாடு,
போன் : 0422 –2435555, மின்னஞ்சல் : shares@shivamills.com.
இணையதளம் : www.shivamills.com CIN : L17111TZ2015PLC022007

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

காகித வடிவ பங்குகளை மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குவதற்கான (DEMAT) சிறப்பு சாளரம்

ஜனவரி 30, 2026 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண்.**SEBI/HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026** ன்படி ஏப்ரல் 1, 2019ற்கு முன் பங்குதாரர்கள் காகித வடிவிலான பங்கு பரிமாற்றத்திற்காக சான்றிதழ்களை நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவை குறைபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டிருப்பின், அவற்றை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான சிறப்பு சாளரம் பிப்ரவரி 5, 2026 முதல் பிப்ரவரி 4, 2027 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பங்குதாரர்கள், சரியான ஆவணங்களை தாக்கல் செய்து அவற்றை மின்னணு பங்குகளாக மட்டுமே பெற்றுக் கொள்ளலாம். உரிய ஆவணங்களுடன் பங்குதாரர்கள் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

M/s. MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட
(முன்னர் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்)
"சூர்யா" 35, மேபிளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம், சௌரிபாளையம் ரோடு,
கோயம்புத்தூர் – 641 028, தொலைபேசி : +91 422 4958995/ 2539835 / 36
மின்னஞ்சல் : **investor.helpdesk@in.mpms.mufg.com**

சிவா மில்ஸ் லிமிடெட்டிற்காக
கோயம்புத்தூர் M சியாமளா
23.10.2026 நிறுவன செயலாளர்



கரூர் மாவட்ட மைய நூலகக் கூட்டரங்கில் போட்டித்தேர்வுகளுக்கான புத்தக விற்பனை மையம்: கலெக்டர் முத்துக்குமரன் திறந்தார்

கரூர், அக். 23–

புத்தகங்களை வாசிப்பதன் மூலம் மாணவர்கள் தங்களது அறிவுத்திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்று கரூர் கலெக்டர் சி.முத்துக்குமரன் தெரிவித்தார்.

கரூர் மாவட்ட மைய நூலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் போட்டித் தேர்வுகளுக்கான புத்தக விற்பனை மையத்தை கலெக்டர் சி.முத்துக்குமரன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) நேர்முகத் தேர்வில் நான்கு முறை தோல்வியடைந்தேன். ஐந்தாவது முறை நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று, மத்திய கலால் மற்றும் சுங்கத் துறையில் பணிபுரிய வாய்ப்புப் பெற்றேன். அதே நேரத்தில், தமிழக அரசின் குரூப் 1 பணிக்கும் தேர்வானேன். குடும்பச் சூழல் காரணமாக தமிழக அரசுப் பணியைத் தேர்ந்தெடுத்தேன். இன்று கலெக்டராகப் பணியாற்றி வருகிறேன்.

2001 முதல் 2005 வரை யுபிஎஸ்சி தேர்வுகளை எழுதினேன். அதற்கு முன்பு காவல் துறை தலைமை அலுவலகத்தின் தொலைத்தொடர்புப் பிரிவில் குரூப் 4 அலுவலராகப் பணியாற்றினேன். பின்னர் குரூப் 2 தேர்வில் தேர்ச்சி பெற்று நகராட்சி ஆணையராகப் பணியாற்றினேன். அதன்பிறகு குரூப் 1 தேர்வில் வெற்றி பெற்றேன். வெற்றி, தோல்வி என்பது இயல்பானது. பத்து ஆண்டுகளில் நான் கற்றுக்கொண்ட பாடங்கள் என்னை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்தன.

போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு தொடர்ந்து புத்தகங்களை வாசிக்க வேண்டும். வாசிப்புப் பழக்கம் அறிவை வளர்ப்பதுடன் ஒழுக்கத்தையும் கற்றுத் தரும்.

போட்டித் தேர்வுகள் என்பது எவ்வளவு படித்திருக்கிறோம் என்பதைச் சோதிப்பது மட்டுமல்ல; படித்ததைப் புரிந்துகொண்டு, அதைத் தேர்வில் சிறப்பாக வெளிப்படுத்துவதும்தான் முக்கியம்.

கரூர் மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுப் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவதற்குத் தேவையான வசதிகள் உள்ளன. மாணவர்கள் அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் நூலகத் துறை அலுவலர்கள், நன்கொடையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அறிவிப்பு

படிவம் எண். CAA. 2

நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 230(3)ன்படி மற்றும் நிறுவனங்களின் விதி 6 மற்றும் விதி 7 (சமரசம், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016)

நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம்-I, சென்னை பிரிவு அமர்வு முன்பாக

CA (CAA) / 73 (CHE) / 2026 சம்பந்தமாக,

நிறுவனங்கள் சட்டம் 2013, உட்பிரிவுகள் 230 முதல் 232 வரை படிக்க பெற்ற மற்றும் இதற்கு பொருந்துகின்ற நிறுவனங்கள் சட்டம் 2013ன் வேறு பிரிவுகளின் (சமரசம், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016) படிக்க பெற்று

மற்றும்

சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட்
("சன்காம்ப்" / "பரிமாறும் நிறுவனம்")

உடன் மற்றும் உள்ளே

பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்
("BIPL" / "பரிமாற்றம் பெறும் நிறுவனம்")

மற்றும்

அதன் பங்குதாரர்கள் முறையாக

பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்
(CIN: U35999TN1962PTC004928)
1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ்
பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம்,
இதன் பதிவு அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை,
தமிழ்நாடு, இந்தியா 600 002.
இதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் பிரதிநிதித்துவப்படுகிறது

... இரண்டாவது விண்ணப்பதாரர் நிறுவனம் / பரிமாற்றம் பெறும் நிறுவனம்

பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்கள் சந்திப்பின் அறிவிப்பு மற்றும் விளம்பர அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (**தீர்ப்பாயம்**) அக்டோபர் 14ம் தேதி 2026 தேதியிட்ட **("ஆணை")** மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணை நிறுவன விண்ணப்பம் ஒரு தனி அமர்வு கூட்டத்தை **பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ('நிறுவனம்')** அதன் பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்கள் பின்வரும் நோக்கங்களுக்காக அதாவது நன்றாக இருப்பின் ஏற்பது மற்றும் மேம்படுத்துதல் உடனோ இல்லாமலோ அங்கீகரிப்பது பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை (பரிமாற்றம் பெறும் நிறுவனம்) சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட் (பரிமாறும் நிறுவனம்) உடன் ஒன்றிணைக்கும் முன்மொழியப்பட்ட திட்டம் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013 உட்பிரிவு 230–232ன் படி அதன் பங்குதாரர்கள் முறையாக **("திட்டம்")** மற்றும் அதன் தொடர்பான இயற்றப்பெற்ற ஏற்புடைய சட்டப்பிரிவுகள் உடன் சொல்லப்பட்ட ஆணையின்படி வழிக்காட்டுதல்களின்படி அதன் இணக்கமான சட்டங்களின்படி இதற்கு ஒத்த சுற்றறிக்கைகள் நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் மூலமாக வழங்கப்பட்டு, **வெள்ளிக்கிழமை, நவம்பர் 27, 2026 காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொளி கூட்டம் ('VC') அல்லது மற்ற ஒலி காணொளி ('OAVM') ஊடாக நடத்தலாம் என்கிற அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளது.

விளக்கக் குறிப்புடன் கூடிய இந்த அறிவிப்பானது, தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கு அக்டோபர் 23, 2026 அன்று மின்னணு முறையிலும், நிறுவனத்திடம் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கு அக்டோபர் 23, 2026 அன்று பதிவுத் தபால் / விரைவுத் தபால் / கூரியர் மூலமாகவும் அனுப்பப்படுகிறது.

கூட்டத்தின் அறிவிப்பு விரிவான அறிக்கை மற்றும் அதன் தொடர்புடைய பக்கங்கள் ஆகியவை கம்பெனியின் இணையதளமான www.brakesindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் சிடிஎஸ்எல்–ன் இணையதளமான www.evotingindia.com–ல் கிடைக்கும். மேற்கூறிய திட்டத்தின் நகல்களையும், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 230ன் கீழ் உள்ள அறிக்கையையும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் இருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். மேலும், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர, அனைத்து வேலை நாட்களிலும் வணிக நேரங்களில் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அவற்றை ஆய்வுக்காக பார்க்கலாம்.

Ms. மௌல்ஸ்ரீ ஸ்ரீவத்ஸ்தவா அவர்களை தலைவராகவும், **திரு. ஸ்ரீ குமார்** அவர்களை பரிசீலனையாளராகவும் நியமனம் செய்துள்ளது.

மேலும், நிறுவனங்கள் சட்டம் 2013ல் வழங்கப்பட்டுள்ள சாசனங்களின்படி பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) நிறுவனம் மூலம் தொலைதூர வாக்குப்பதிவுமுறை ('தொலை தூரத்தில் இருந்து இணையம் மூலம் வாக்களித்தல்') உரிமை வழங்கப்படுகிறது.

இந்த கூட்டங்களில் இணையவாக்கு தொலைதூர மின்னணு வாக்கு செலுத்துவதற்கான கால அளவு மற்றும் நிறைவு தேதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

விவரங்கள்	தேதி மற்றும் நேரம்
வரையறை தேதி	அக்டோபர் 31, 2026
தொலைதூர மின்னணு வாக்கு துவங்கும் தேதி மற்றும் நேரம்	செவ்வாய்க்கிழமை, நவம்பர் 24, 2026 காலை 09.00 மணி (இந்திய நேரப்படி)
தொலைதூர மின்னணு வாக்கு முடிவடையும் தேதி மற்றும் நேரம்	வியாழக்கிழமை, நவம்பர் 26, 2026 மாலை 05.00 மணி (இந்திய நேரப்படி)
கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு	வெள்ளிக்கிழமை, நவம்பர் 27, 2026 (கூட்டத்தின் தலைவரால் வாக்குப்பதிவு அறிவிக்கப்பட்டவுடன்)

மேலே குறிப்பிட்டுள்ளபடி, அந்தந்த கூட்டங்களுக்கான இறுதி நேரத்திற்குப் பிறகு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதி முடக்கப்படும். பிணையற்ற கடன் கொடுத்தவர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்து விட்டால், பின்னர் அவர் அதை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

தொலைதூர மின்னணு வாக்கு வசதி மூலம் வாக்களிக்க தவறிய பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கு அவர்களின் வாக்களிக்கும் உரிமையை மின்னணு வாக்களிக்கும் வசதியை கூட்டத்தின்போது ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தொலைதூர மின்னணு வாக்கு மூலம் வாக்களித்த பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால், மீண்டும் வாக்களிக்கும் உரிமையை அவர்கள் பெற இயலாது.

இணைப்புத் திட்டம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டால், அதனைத் தொடர்ந்து தீர்ப்பாயத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்கு அளிக்கும் செயல்முறை குறித்து சிடிஎஸ்எல் வழங்கிய அறிவுறுத்தல்கள் அறிவிப்புடன் அனுப்பப்பட்டுள்ளன. மின்னணு முறையில் வாக்களிக்கும் முறை தொடர்பான அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தல்வி, AVP, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL), ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃபியூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், எம்என் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சலிலோ அல்லது 1800 21 09911 என்ற இலவச எண்ணிலோ அழைக்கவும்.

ஒப்பம்/–
Ms. மௌல்ஸ்ரீ ஸ்ரீவத்ஸ்தவா
தேதி : அக்டோபர் 23, 2026 **இரண்டாவது விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பிணையற்ற**
இடம் : சென்னை **கடனாளர்களின் கூட்டத்திற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்**

அறிவிப்பு

படிவம் எண். CAA. 2

நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 230(3)ன்படி மற்றும் நிறுவனங்களின் விதி 6 மற்றும் விதி 7 (சமரசம், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016)

நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம்-I, சென்னை பிரிவு அமர்வு முன்பாக

CA (CAA) / 73 (CHE) / 2026 சம்பந்தமாக,

நிறுவனங்கள் சட்டம் 2013, உட்பிரிவுகள் 230 முதல் 232 வரை படிக்க பெற்ற மற்றும் இதற்கு பொருந்துகின்ற நிறுவனங்கள் சட்டம் 2013ன் வேறு பிரிவுகளின் (சமரசம், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016) படிக்க பெற்று

மற்றும்

சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட்
("சன்காம்ப்" / "பரிமாறும் நிறுவனம்")

உடன் மற்றும் உள்ளே

பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்
("BIPL" / "பரிமாற்றம் பெறும் நிறுவனம்")

மற்றும்

அதன் பங்குதாரர்கள் முறையாக

சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட்
(CIN: U36100TN2010PTC076378)
1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ்
பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம்,
பிரேக்ஸ் இந்தியா காம்பவுண்ட், எம்.டி.எச். ரோடு, கொரட்டூர் S.O.,
பாடி, திருவள்ளூர், தமிழ்நாடு 600 050.
இதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் பிரதிநிதித்துவப்படுகிறது

... முதலாவது விண்ணப்பதாரர் நிறுவனம் / பரிமாறும் நிறுவனம்

சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்சரஸ் பிரைவேட் லிமிடெட்டின் பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்கள் சந்திப்பின் அறிவிப்பு மற்றும் விளம்பர அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (**தீர்ப்பாயம்**) அக்டோபர் 14ம் தேதி 2026 தேதியிட்ட **("ஆணை")** மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணை நிறுவன விண்ணப்பம் ஒரு தனி அமர்வு கூட்டத்தை **சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்ஸர்ஸ் பிரைவேட் லிமிடெட் ('நிறுவனம்')** அதன் பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்கள் பின்வரும் நோக்கங்களுக்காக அதாவது நன்றாக இருப்பின் ஏற்பது மற்றும் மேம்படுத்துதல் உடனோ இல்லாமலோ அங்கீகரிப்பது பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை (பரிமாற்றம் பெறும் நிறுவனம்) சுந்தரம் காம்போசிட் ஸ்ட்ரக்ஸரஸ் பிரைவேட் லிமிடெட் (பரிமாறும் நிறுவனம்) உடன் ஒன்றிணைக்கும் முன்மொழியப்பட்ட திட்டம் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013 உட்பிரிவு 230–232ன் படி அதன் பங்குதாரர்கள் முறையாக **("திட்டம்")** மற்றும் அதன் தொடர்பான இயற்றப்பெற்ற ஏற்புடைய சட்டப்பிரிவுகள் உடன் சொல்லப்பட்ட ஆணையின்படி வழிக்காட்டுதல்களின்படி அதன் இணக்கமான சட்டங்களின்படி இதற்கு ஒத்த சுற்றறிக்கைகள் நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் மூலமாக வழங்கப்பட்டு, **வெள்ளிக்கிழமை, நவம்பர் 27, 2026 காலை 10.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொளி கூட்டம் ('VC') அல்லது மற்ற ஒலி காணொளி ('OAVM') ஊடாக நடத்தலாம் என்கிற அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளது.

விளக்கக் குறிப்புடன் கூடிய இந்த அறிவிப்பானது, தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கு அக்டோபர் 23, 2026 அன்று மின்னணு முறையிலும், நிறுவனத்திடம் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கு அக்டோபர் 23, 2026 அன்று பதிவுத் தபால் / விரைவுத் தபால் / கூரியர் மூலமாகவும் அனுப்பப்படுகிறது.

கூட்டத்தின் அறிவிப்பு விரிவான அறிக்கை மற்றும் அதன் தொடர்புடைய பக்கங்கள் ஆகியவை கம்பெனியின் இணையதளமான www.leggarocomposites.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் சிடிஎஸ்எல்–ன் இணையதளமான www.evotingindia.com–ல் கிடைக்கும். மேற்கூறிய திட்டத்தின் நகல்களையும், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 230ன் கீழ் உள்ள அறிக்கையையும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் இருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். மேலும், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர, அனைத்து வேலை நாட்களிலும் வணிக நேரங்களில் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அவற்றை ஆய்வுக்காக பார்க்கலாம்.

Ms. மௌல்ஸ்ரீ ஸ்ரீவத்ஸ்தவா அவர்களை தலைவராகவும், **திரு. ஸ்ரீ குமார்** அவர்களை பரிசீலனையாளராகவும் நியமனம் செய்துள்ளது.

மேலும், நிறுவனங்கள் சட்டம் 2013ல் வழங்கப்பட்டுள்ள சாசனங்களின்படி பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) நிறுவனம் மூலம் தொலைதூர வாக்குப்பதிவுமுறை ('தொலை தூரத்தில் இருந்து இணையம் மூலம் வாக்களித்தல்') உரிமை வழங்கப்படுகிறது.

இந்த கூட்டங்களில் இணையவாக்கு தொலைதூர மின்னணு வாக்கு செலுத்துவதற்கான கால அளவு மற்றும் நிறைவு தேதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

விவரங்கள்	தேதி மற்றும் நேரம்
வரையறை தேதி	அக்டோபர் 31, 2026
தொலைதூர மின்னணு வாக்கு துவங்கும் தேதி மற்றும் நேரம்	செவ்வாய்க்கிழமை, நவம்பர் 24, 2026 காலை 09.00 மணி (இந்திய நேரப்படி)
தொலைதூர மின்னணு வாக்கு முடிவடையும் தேதி மற்றும் நேரம்	வியாழக்கிழமை, நவம்பர் 26, 2026 மாலை 05.00 மணி (இந்திய நேரப்படி)
கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு	வெள்ளிக்கிழமை, நவம்பர் 27, 2026 (கூட்டத்தின் தலைவரால் வாக்குப்பதிவு அறிவிக்கப்பட்டவுடன்)

மேலே குறிப்பிட்டுள்ளபடி, அந்தந்த கூட்டங்களுக்கான இறுதி நேரத்திற்குப் பிறகு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதி முடக்கப்படும். பிணையற்ற கடன் கொடுத்தவர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்து விட்டால், பின்னர் அவர் அதை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

தொலைதூர மின்னணு வாக்கு வசதி மூலம் வாக்களிக்க தவறிய பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்களுக்கு அவர்களின் வாக்களிக்கும் உரிமையை மின்னணு வாக்களிக்கும் வசதியை கூட்டத்தின்போது ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தொலைதூர மின்னணு வாக்கு மூலம் வாக்களித்த பாதுகாப்பற்ற கடன் கொடுத்தவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால், மீண்டும் வாக்களிக்கும் உரிமையை அவர்கள் பெற இயலாது.

இணைப்புத் திட்டம் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டால், அதனைத் தொடர்ந்து தீர்ப்பாயத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்கு அளிக்கும் செயல்முறை குறித்து சிடிஎஸ்எல் வழங்கிய அறிவுறுத்தல்கள் அறிவிப்புடன் அனுப்பப்பட்டுள்ளன. மின்னணு முறையில் வாக்களிக்கும் முறை தொடர்பான அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தல்வி, AVP, சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL), ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃபியூச்சர்க்ஸ், மஃபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், எம்என் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை – 400013 அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சலிலோ அல்லது 1800 21 09911 என்ற இலவச எண்ணிலோ அழைக்கவும்.

ஒப்பம்/–
Ms. மௌல்ஸ்ரீ ஸ்ரீவத்ஸ்தவா
தேதி : அக்டோபர் 23, 2026 **முதலாவது விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பிணையற்ற**
இடம் : சென்னை **கடனாளர்களின் கூட்டத்திற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்**

அபான் ஆப்ஷோர் லிமிடெட்

aban®

(கார்ப்பரேட் திவால் தீர்மான நடைமுறையின் கீழ் உள்ளது)
பதிவு அலுவலகம்: ''ஜனப்ரியா கிரஸ்ட்'', 113, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008.
Website: www.abanoffshore.com; Tel No.044-49060606; Fax:044-28195527 CIN:L01119TN1986PLC013473

பொது அறிவிப்பு

கம்பெனியின் பங்குதாரர்களுக்கான **39வது வருடாந்திர பொதுக் கூட்டம் ("AGM") நவம்பர் 16, 2026, திங்கட்கிழமை அன்று இந்திய நேரப்படி காலை 10.15 மணிக்கு** நடைபெறும் என்றும், **39வது வருடாந்திர பொதுக் கூட்டம்** நிறைவடைந்ததைத் தொடர்ந்து 40வது வருடாந்திர பொதுக் கூட்டம் காணொலி காட்சி ("VC") / பிற ஒலி–ஒளி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறும் என்றும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் (MCA) 19 செப்டம்பர் 2024 தேதியிட்ட தனது சுற்றறிக்கை எண். 9/2024–ல் வெளியிட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் 8 ஏப்ரல் 2020, 13 ஏப்ரல் 2020, 5 மே 2020, 13 ஜனவரி 2021, 8 டிசம்பர் 2021, 28 டிசம்பர் 2022 மற்றும் 25 செப்டம்பர் 2023 ஆகிய தேதியிட்ட சுற்றறிக்கைகளின் படி, கம்பெனியின் வருடாந்திர பொதுக் கூட்டம் காணொலி காட்சி (VC) அல்லது பிற ஒலி–ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக நடைபெறும். எனவே, உறுப்பினர்கள் நடைபெறவிருக்கும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் கலந்து கொண்டு பங்கேற்கலாம்.

2024–25 நிதியாண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்டத்தின் (AGM) அறிவிப்பு மற்றும் 2025–26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை ஆகியவற்றுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு ஆகியவை மின்னணு வடிவில் **22 அக்டோபர் 2026** அன்று அனுப்பப்பட்டுள்ளன. இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) **03 அக்டோபர் 2024** தேதியிட்ட சுற்றறிக்கை வாயிலாக வழங்கிய தளர்வுகளுக்கு இணங்க, **16 அக்டோபர் 2026** அன்று வணிக நேரம் முடிவடையும் போது நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) / சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட உறுப்பினர்கள் பதிவேடு / பயனடையத்தக்க உரிமையாளர்களின் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள மற்றும் கம்பெனி / டெபாசிட்டரிகளில் தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் இது அனுப்பப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் 2024–25 மற்றும் 2025–26–ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான **www.abanoffshore.com**, நேஷனல் செக்யூரிட்டி டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) இணையதளமான **www.evoting.nsdl.com,** பிஎஸ்இ லிமிடெட் (BSE Limited) இணையதளமான **www.bseindia.com** மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் இணையதளமான **www.nseindia.com** ஆகியவற்றிலும் முறையே கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் அறிவிப்பில் உள்ளன.

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 103–ன் கீழ் கூட்டத்தில் பங்கேற்பவர்களை கணக்கிடும் நோக்கத்திற்காக, VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 108 மற்றும் அதனுடன் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு இணங்க, உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை மின்னணு முறையில் செலுத்துவதற்கு ஏதுவாக, நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் [NSDL] மூலமாக வணிகப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான மின்னணு வாக்குப்பதிவு வசதியை (தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு) கம்பெனி வழங்கியுள்ளது. கூடுதலாக, கூட்டத்தின் போதும் மின்னணு வழி வாக்குப்பதிவு வசதி வழங்கப்படும், மேலும் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் ஏற்கனவே தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கவில்லை என்றால், அவர்கள் கூட்டத்தில் தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தலாம். தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு மற்றும் கூட்டத்தில் மின்னணு–வாக்குப்பதிவு செய்வதற்கான விரிவான நடைமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவிற்கான கட்–ஆஃப் தேதியான **9 நவம்பர் 2026** அன்று டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேடு / பலன்பெறும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு வசதியைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர். அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, ஆனால் வாக்குப்பதிவிற்கான கட்–ஆஃப் தேதியான **9 நவம்பர் 2026**–க்கு முன்னதாக, கம்பெனியின் பங்குகளைப் பெற்று உறுப்பினராகும் எந்தவொரு நபரும், evoting.nsdl.com–க்கு கோரிக்கை அனுப்புவதன் மூலமாகவோ அல்லது எங்களின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்களான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், "சுப்பிரமணியன் பில்டிங்", எண்.1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002. தொலைபேசி: +91 044 28460390 (5 லைன்கள்); தொலைநகல்: +91 044 28460129; மின்னஞ்சல்: investor@cameoindia.com ஆகியவற்றைத் தொடர்புகொள்வதன் மூலமாகவோ உள்நுழைவு ஐடி (Login Id) மற்றும் கடவுச்சொல்லைப் (password) பெறலாம்.

தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு நவம்பர் 13, 2026 வெள்ளிக்கிழமை (காலை 9.00 மணி) அன்று தொடங்கி 2026 நவம்பர் 15, ஞாயிற்றுக்கிழமை (மாலை 5.00 மணி) அன்று முடிவடைகிறது.

குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு (அதாவது, நவம்பர் 15, 2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்குப் பிறகு) உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை மின்னணு முறையில் செலுத்த முடியாது, மேலும் அதன்பிறகு NSDL–ஆல் வாக்களிப்பதற்கான தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு முறை முடக்கப்படும்.

தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு செயல்முறை / வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) வாக்களிப்பதற்கான ஆய்வாளராக (Scrutinizer) பயிற்சி நிறுவனச் செயலர்களான (Practicing Company Secretaries) M/s. ஜி. ராமச்சந்திரன் & அசோசியேட்ஸ், சென்னை நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு–வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் தங்களது வாக்குகளைச் செலுத்த அவர்களுக்கு உரிமை இல்லை.

மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (depository participants) பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், மேலும் காகித வடிவத்தில் (physical mode) பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்–க்கு investor@cameoindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் சந்தேகங்கள் / குறைகள் இருந்தால், **திருமதி. பல்லவி மத்ரே, துணைத் தலைவர், NSDL, 301, 3–வது தளம், நமன் சேம்பர்ஸ், ஜி பிளாக், பிளாட் எண்– சி–32, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா கிழக்கு, மும்பை– 400051 என்பவரைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது** evoting@nsdl.co.in / pallavid@nsdl.co.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம், தொலைபேசி: 91 022 – 4886 7000.

(இயக்குநர்கள் குழுவின் உத்தரவுப்படி)
சைலேஷ் தேசாய்
தீர்மான நிபுணர் (Resolution Professional)
பதிவு எண். IBBI/IPA-001/IP-P00183/2017-18/10362

இடம் : சென்னை
தேதி : 22.10.2026

சிறுவன் ருத்ரனின் பெற்றோர், உறவினர்கள் 30 நாள்களுக்குள் தொடர்பு கொள்ள அறிவுறுத்தல்

கிருஷ்ணகிரி, அக். 23–

கிருஷ்ணகிரி மாவட்ட குழந்தைகள் நலக் குழுமத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 4 வயது சிறுவன் ருத்ரனின் பெற்றோர் அல்லது உறவினர்கள், இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 30 நாள்களுக்குள் உரிய சான்றுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கலெக்டர் தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், படப்பள்ளி கிராமம், அம்பேத்கர் நகரில் சுற்றித் திரிந்த சிறுவன் ருத்ரனை, அப்பகுதி பொதுமக்கள் கடந்த 29.09.2025 அன்று மீட்டு, மாவட்ட குழந்தைகள் நலக் குழுமத்திடம் ஒப்படைத்தனர். தற்போது அந்தக் குழுமத்தின் பொறுப்பில் சிறுவன் பராமரிக்கப்பட்டு வருகிறார்.

சிறுவனின் பெற்றோர் அல்லது உறவினர்கள் உரிய சான்றுகளுடன் கீழ்க்கண்ட அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம்.மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், எண் 100, மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி. தொலைபேசி: 04343292567, 6382613358.

குழந்தைகள் நலக் குழுமம், எண் 9, டிஆர்டிஏ வணிக வளாகம், கிருஷ்ணகிரி. தொலைபேசி: 04343292563, 6382613443.

குறிப்பிட்ட காலத்துக்குள் யாரும் தொடர்பு கொள்ளாவிட்டால், சிறுவனைத் தத்தெடுப்பது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.